**01.04.2024 அ.வ.எண்.55/2016 வா.சா.2, வெங்கடேசன் த/பெ. ஜெயராமன்**

**குறுக்கு விசாரணை**

வாதி எனது மாமனார். வாதி என்ன பரிகாரம் கோரியுள்ளார் என கேட்டால் வழக்கு சொத்தை அவர் அனுபவிப்பதை தடுக்க கூடாது என கேட்டுள்ளார். வாதி புறம்போக்கு நிலத்திற்கு மட்டும்தான் வழக்கிட்டுள்ளார். வாதி வழக்கிட்டுள்ள புறம்போக்கு நிலத்தில் அவர் மட்டுமின்றி 1-ம் பிரதிவாதியும் மாடு கட்டி அனுபவிக்கிறார் என்றால் மொத்தம் ஆறு அருகாமை நிலத்துகாரர்கள் அனுபவிக்கிறார்கள். மற்ற அருகாமை நிலத்துகாரர்கள் மீது ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அவரவர்கள் அவர்களது இடத்திலேயே இருக்கிறார்கள் வாதிக்கு இடம் ஒதுக்கிவிட்டதே 1-ம் பிரதிவாதிதான் அதில் தற்போது 1-ம் பிரதிவாதி பிரச்சனை செய்கிறார். 20.12.1999 அன்று வாதிக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் இடையே பரிவர்த்தனை ஏற்பட்டது. பரிவர்த்தனைக்கு முன்னர் வழக்கு சொத்தை 1-ம் பிரதிவாதி அனுபவித்தார் என்றால் இல்லை வாதியும் கூட்டாகத்தான் அனுபவித்தார். புறம்போக்கு நிலத்தை 1-ம் பிரதிவாதி அனுபவிப்பதற்கு ஆவணம் உள்ளதா என கேட்டால் அவரிடம் உள்ளது. வழக்கு பி அட்டவணை சொத்தில் 1-ம் பிரதிவாதியும் அனுபவத்தில் உள்ளார் என்றால் அது சரியல்ல. எனது ஊரிலிருந்து வழக்கு சொத்து அமைவிடம் சுமார் 15 கி.மீ தூரத்தில் உள்ளது.